பெறுநர். 20-06-2016

தொழிலாளர் இணை ஆணையர் / சென்னை,
தொழிலாளர் துறை,
சென்னை – 600 006

மரியாதைக்குரிய அம்மையீர்,

பொருள்: தமிழ்நாடு மின்சார வாரியம் - எழுத்துப்பிரிவு அல்லாத இதர தொழிலாளர்கள் மற்றும் எழுத்துப்பிரிவு தொழிலாளர்களுக்கு சான்றிடப்பட்ட நிலையாணைகளில் சில கூறுகளுக்கு திருத்தங்களை தொழிலகப் பணிகள் (நிலையாணைகள்) சட்டம் 1946 பிரிவு 10(2) –ன்படி முன்மொழிவது தொடர்பாக.

பார்வை: **1)**தமிழ்நாடு மின்சாரவாரியத்தின் எழுத்துப்பிரிவு அல்லாத தொழிலாளருக்கான 20-10-1965-ல் சான்றளிக்கப்பட்ட நிலையாணைகள்

**2)**தமிழ்நாடு மின்சாரவாரியத்தின் எழுத்துப்பிரிவு தொழிலாளருக்கான 23-07-1969-ல் சான்றளிக்கப்பட்ட நிலையாணைகள்

**3)**தொழில் தகராறு சட்டம் 1947 பிரிவு 12(3)-ன்படி தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கும் மற்றும் தொழிற்சங்கங்களுக்கும் தொழிலாளர் ஆணையர் முன் ஏற்பட்ட ஒப்பந்தம்.எண்.S3/92465/85 dt.21-10-1985

**4)**வாரிய உத்திரவு எண். B.P.Ms. (FB) No. 94, ( Secretariat Branch) Dated 20-11-85.

5) வாரிய உத்திரவுஎண். B.P.Ms. (FB) No. 75, ( Secretariat Branch) Dated 06-11-96.

6) வாரிய உத்திரவுஎண். B.P.Ms. (FB) No. 76, ( Secretariat Branch) Dated 11-09-97.

7) வாரிய உத்திரவு எண். (PER) CMD Proceedings No.52, Dated 14-02-2014.

8) எங்களது சங்கத்தின் 28-03-2016 தேதியிட்ட முன்மொழிவு

**(9)** தொழிலாளர் இணை ஆணையர் கடித எண் ஆ/1334 16 நாள் 15-04-2016.

**(10)**தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் பதில் கடித எண் 28478/A18/ A182/2016-1, dated 24-05-2016.

-2

தமிழ்நாடு மின்சாரவாரியத்தின் எழுத்துப்பிரிவு அல்லாத இதர தொழிலாளர்கள் மற்றும் எழுத்துப்பிரிவு தொழிலாளர்களுக்கு சான்றிடப்பட்ட நிலையாணைகளில் சில கூறுகளுக்கு, திருத்தங்களை, தொழிலகப் பணிகள் (நிலையாணைகள்) சட்டம் 1946 பிரிவு 10(2) –ன்படி எங்களது சங்கத்தின் 28-03-2016 கடிதத்தில் முன்மொழிவு செய்திருந்தோம்.

எங்களது கோரிக்கையின் மீது நிர்வாகம் தனது 24-05-2016 தேதியிட்ட கடிதத்தில் தனது கருத்துக்களை தெரிவித்துள்ளது. இதற்கு எங்களது மறுப்பினை கீழ்கண்டவாறு சமர்ப்பிக்கின்றோம்.

1. நிர்வாகம் தெரிவித்துள்ளபடி களப்பிரிவு பணியாளர்கள் , அலுவலகஉதவியாளர்கள் , தபேதார்கள் முதலியவர்களுக்கு சொந்த அலுவலுக்கான ஈட்டா விடுப்பினை அனுமதிப்பதற்கு வாரிய உத்திரவு எண் B.P.Ms. (FB) No. 94, ( Secretariat Branch) Dated 20-11-85. வெளியிடப்பட்டது.

   ஆனால் இந்த வாரிய உத்திரவு நிலையாணை விதிகளில் திருத்தம் செய்வதற்கு முன் வெளியிடப்பட்ட ஒரு இடைக்கால ஏற்பாடுதான். இந்த வாரிய உத்திரவில் " Pending Amendment to the Standing Orders " என்பது தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. "விடுப்பு" என்பது நிலையாணை வரையறைக்கு உட்பட்ட பொருள் என்பதால் வாரிய உத்திரவில் வெளியிடப்பட்ட திருத்தம் நிலையாணை விதிகளில் கண்டிப்பாக இடம்பெற்றாக வேண்டும்.

2. ஊழியர்கள் ஓய்வு பெறும் நாளில் சொந்த அலுவலுக்கான ஈட்டா விடுப்பினை சரண் செய்து காசாக்கிக்கொள்வதற்கான வாரிய உத்திரவு எண் B.P.Ms. (FB) No. 75, ( Secretariat Branch) Dated 06-11-1996. வெளியிடப்பட்டது நிர்வாகம் கூறுவது போல் ஏற்கனவே அமுலில் இருக்கும் வாரிய உத்திரவு எண் B.P.Ms. (FB) No. 94, ( Secretariat Branch) Dated 20-11-85 – ன் தொடர்ச்சியல்ல. மாறாக தமிழக அரசின் நிதி ( ஓய்வூதியம்) துறை, அரசாணை எண் 488 நாள் 12-8-1996-ன் அமுலாக்கமே என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

3. பணிவிதிகளைப் பொறுத்த அளவில், தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் அரசு ஆணைகளை பின்பற்றித்தான் நடைமுறைப் படுத்துவதாக நிர்வாகம் தெளிவாகக் கூறியுள்ளதை தங்களது பார்வைக்கு கொண்டு வருகிறோம். இந்த ஒப்புதல் வாக்குமூலம் தற்போது நடைபெற்று வரும் வழக்கில் எங்களது கோரிக்கைக்கு வலு சேர்ப்பதாக அமைந்துள்ளது. காரணம் அரசு ஆணைக்கும் வாரிய உத்திரவுக்கும் இடையே முரண்பாடு இருப்பதால்தான் நாங்கள் இந்தப் பிரச்சனையை எழுப்பியுள்ளோம்.

4. அரசு ஆணை 488 நாள் -12-8-1996-ல் ஓய்வு பெறும் நாளில் பணியாளர்களின் இருப்பில் உள்ள, சொந்த அலுவலுக்கான விடுப்பில் 50%-ஐ 90 நாட்களுக்கு மிகாமல் , விடுப்பு சம்பளமாக பெற்றுக்கொள்ளலாம் என்றுதான் கூறப்பட்டுள்ளது. **வேறு எந்த நிபந்தனையும் விதிக்கப்படவில்லை. சம்பள வித்தியாசமோ கடைநிலை ஊழியர் என்றோ மேல் நிலை ஊழியர் என்றோ எந்த வித்தியாசமும் கிடையாது.** அப்படியிருக்க அரசு உத்திரவை அப்படியே பின் பற்றுவதாகக் அறிவிக்கும் நிர்வாகம் , களப்பிரிவின் கடை நிலை ஊழியர்கள் , அலுவலக உதவியாளர்கள் , தபேதார்கள் முதலியோர் சொந்த அலுவலுக்கான விடுப்பில் 50%-ஐ 90 நாட்களுக்கு மிகாமல் விடுப்பு சம்பளமாக பெறுவதற்கு வாரிய உத்திரவு எண் B.P.Ms. (FB) No. 94, ( Secretariat Branch) Dated 20-11-85 – ல் கூறப்பட்டிருக்கும் நிபந்தனைகளுக்கு உட்பட்டது என அறிவிப்பது எந்த விதத்திலும் நியாயமல்ல.



5. மேலும் நிலுவையில் உள்ள நிலையாணை விதிகள் திருத்தத்திற்கு முன்மொழிவு கொடுத்து சான்றிதழ் கோருவதற்கும் , மின்வாரியத்தின் கட்டமைப்பை திருத்துவதற்கான முத்தரப்பு ஒப்பந்தத்திற்கும் , முடிச்சு போடுவது நியாயமல்ல.

6. 1-11-2010 முதல் அமுலுக்கு வரவேண்டிய இந்த முத்தரப்பு ஒப்பந்தம் பற்றி மின்வாரிய நிர்வாகமும் தொழிற்சங்கங்களும் பல சுற்று பேச்சு வார்த்தை நடத்தி இரு தரப்பும் ஒப்புக்கொள்ளும் ஒரு இணக்கமான நகல் ஒப்பந்தம் தயார் செய்து ஜனவரி 2011-ம் ஆண்டிலேயே அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அதில் அரசுத் தரப்பில் சில திருத்தங்கள் செய்ய உத்தேசித்து, அதன் மீது வாரிய நிர்வாகம் , சங்கத்தின் கருத்துக்களைப் பெற்று 2012-ல் அரசுக்கு அனுப்பி வைத்தது. அரசின் ஒப்புதல் இன்னமும் கிடைக்கப் பெறாமையால் , முத்தரப்பு ஒப்பந்தம் இறுதி செய்யப்படாமல் உள்ளது. அதனால் வாரியம் பிரித்தமைப்பது முற்றுப்பெறாமல் உள்ளது. சொத்து மற்றும் கடன் ஒப்படைப்பு , பணியாளர் மாறுதல் முதலியவற்றை முடிப்பதற்கான அவகாசத்தை தமிழக அரசு அவ்வப்பொது நீட்டித்து வருகிறது. முத்தரப்பு ஒப்பந்தம் கையெழுத்தாகாத நிலையிலும், வாரியத்தின் அன்றாட நடவடிக்கைகள் எதுவும் தடை பெறாமல் வழக்கம் போல் நடந்து கொண்டுதான் வருகிறது.

உதாரணத்திற்கு 26-03-2012-ல் அனல்மின் வட்டங்களுக்கு 4,620 பணியாளர் எண்ணிக்கை மாற்றத்திற்கான ஒப்பந்தம் போடப் பட்டது.

27-12-2013-ல் 1219 பொது நிர்மான வட்டங்களில் பணியாளர் எண்ணிக்கை மாற்றத்திற்கான ஒப்பந்தம் போடப் பட்டது.

09-01-2014-ல் சுமார் 70,000 பேர் பயன் பெறும் வகையில் ஊதிய உயர்வு மற்றும் வேலை பளு ஒப்பந்தம் ஏற்படுத்தப் பட்டது.

19-7-2014-ல் நீர் மின் வட்டங்களுக்கு 2286 பணியாளர் எண்ணிக்கைக்கான ஒப்பந்தம் போடப் பட்டது.

7. தற்போது இருக்கின்ற விதிகள் தொழிலாளர்களுக்கு பாதகமான முறையில் திருத்தம் செய்வதை, மாற்றங்கள் செய்வதைத்தான் முத்தரப்பு ஒப்பந்தம் தடை செய்கின்றது. நாங்கள் கோருகின்ற திருத்தம் பணியாளர் நலனுக்கோ வாரிய நலனுக்கோ எதிரானது அல்ல. இவ்வளவு நியாயம் பேசும் நிர்வாகம் தொழிலாளர் நலன்களை பாதிகின்ற வகையிலும் தொழிலாளர்களுக்கு சட்ட முன் அறிவிப்பு தராமலும் இளநிலை உதவியாளர் பணி நியமனத்திற்கு கல்வித் தகுதியாக இருந்த எஸ்.எஸ்.எல்.சி என்பதை பட்டப்படிப்பு என்று ஒருதலை பட்சமாக மாற்றம் செய்யப்பட்டு 24-05-2014-ல் உத்திரவிட்டுள்ளது. இவ்வாறு பணிவிதிகள் மாற்றம் செய்வதற்கு, முத்தரப்பு ஒப்பந்தம் தடையென நிர்வாகம் நினைக்கவில்லை.

8. எங்களது முன்மொழிவில் நாங்கள் கோரியிருந்த நிலையாணை விதிகளில் திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டியதற்கான சூழ்நிலை, நியாயங்கள் மற்றும் காரணங்களை நாங்கள் முன் வைத்துள்ளோம்.

9. எனவே நிலையாணை திருத்தத்திற்கான முன்மொழிவை தாங்கள் சட்டப்படி, மின்வாரியத்தில் செயல் படும் தொழிற் சங்கங்களின் கருத்துக்களை கேட்டு தேவைப்படும் சான்றிதழினை உடனடியாக வழங்கிட வேண்டுகிறோம்.

தங்கள் உண்மையுள்ள

பொதுச்செயலாளர்